செ.வெ.எண்:61 நாள்:31.07.2016

# புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் பூங்காக்கள் மேம்பாட்டு பணிகளுக்கான பூமிபூஜையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

புதுக்கோட்டை நகராட்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நகராட்சி பூங்காக்கள் மேம்பாட்டு பணிகளுக்கான பூமிபூஜை விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் இன்று (31.07.2016) துவக்கி வைத்தார்கள்.

இந்த பூமிபூஜை விழாவினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி புதுக்கோட்டை நகராட்சியில் 37வது வார்டுக்குட்பட்ட கம்பன் நகரில் உள்ள பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கு அம்ரூட் திட்டத்தின் கீழ் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டிலும், 40வது வார்டுக்குட்பட்ட பூங்கா நகரில் உள்ள பூங்கா ரூ.57 இலட்சம் மதிப்பீட்டிலும், 39வது வார்டுக்குட்பட்ட பாரதிநகரில் உள்ள சிறுவர் பூங்கா ரூ.41 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்பாடு செய்வதற்கான பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் தங்களது ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் பூங்காக்களில் செலவழிக்கலாம். எனவே அனைத்து பொதுமக்களும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் கூறினார்.



இந்த பூமிபூஜை விழாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள 3 பூங்காக்களை மேம்பாடு செய்வதற்காக ரூ.1.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தற்பொழுது பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காக்களில் ஆழ்துளை கிணறு, சுற்றுச்சுவர் நடைபாதை, கழிவறை, செடிகள் மற்றும் மரங்கள் நடுதல், விளையாட்டு சாதனங்கள், மின்விளக்குகள், கல் இருக்கைகள், குப்பைத்தொட்டி போன்ற பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற அமைக்கப்படவுள்ளது. இதனை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் இப்பணிகளை மிக விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், நகர்மன்ற துணைத்தலைவர் திரு.சேட் என்ற அப்துல்ரஹ்மான், நகராட்சி ஆணையர் (பொ) திரு.சி.ராஜாராமன், முன்னாள் அமைச்சர் திரு.ராதாகிருஷ்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.பாஸ்கர், திரு.ராமதாஸ், திருமதி.மலர்விழிமுத்து, திரு.ஐயப்பன், திரு.கண்ணன் உள்ளிட்ட பல்வேறு நகர்மன்ற உறுப்பினர்கள், இளநிலை பொறியாளர் திரு.கலியக்குமார், நகர்நல அலுவலர் மரு.விஜயக்குமார், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.மாரிமுத்து, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**